**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. M. ராமதாஸ்,எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 11ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.126/2020**

**(வள்ளியூர் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண். 127/2018)**

**(CNR No. TNTL 27-000688-2020)**

சந்திரகுமாரி .... வாதி

// எதிர் //

முருகன் .... பிரதிவாதி

இந்த வழக்கானது, முதலில் வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.127/2018 என தாக்கல் செய்யப்பட்டு, அதன் பின்னர், மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் உத்தரவின் படி, இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.126/2020 என எண்ணிடப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கானது, என் முன்பு இறுதியாக 20.02.2026 அன்று விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N.K. வானுமாமலை அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த கற்றறிந்த வழக்கறிஞர் திரு. தி. சிவசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:47:42 +0530

வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது, வழக்குரை சொத்து வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டும், அதன்தொடர்ச்சியாக வழக்குரை சொத்தில் வாதியின் தனித்த அனுபவத்தினை பிரதிவாதியோ, அவரது வகையறாக்களோ, முகவர்களோ, வேலையாட்களோ மற்றும் வேறு யாரும் எந்தவித இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும், வழக்கு செலவு தொகை வாதிக்கு பிரதிவாதியிடம் இருந்து கிடைக்கும் படிக்கும் கேட்டு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் : -</u>**

வழக்குரை சொத்து மொத்த பரப்பளவு ஆதியிலே வாதியின் தந்தையின் தந்தை சுடலைமுத்து மற்றும் பார்வதி என்பவருக்கு பாத்தியப்பட்டது ஆகும் என்றும், சுடலைமுத்து மற்றும் பார்வதி வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றும், அந்த பாகப்பிரிவினை படி பிராது தபசில் வாதியின் தந்தையின் தந்தை சுடலைமுத்துவிற்கு ஒதுக்கப்பட்டது என்றும், பிராது தபசில் சர்வே எண்.168/8-ல் தெற்கடைய ஏக்கர் 1, சென்ட் 48 சுடலைமுத்துவிற்கு ஒதுக்கப்பட்டு, அவர் ஆளுகையும், அனுபவமும் செய்து வந்தார் என்றும், சுடலைமுத்து பெயரில் பட்டா

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:47:49 +0530

ஏற்பட்டு உள்ளது என்றும், வாதியின் தகப்பனார் மாடசாமி தன்னுடைய சகோதரிகளான கிருஷ்ணம்மாள், லெட்சுமி ஆகியோர்களுக்கு சீர்சீராட்டுகள் செய்வதால் வழக்குரை சொத்தை வாதியின் தகப்பனாருக்கு, மேற்படி சுடலைமுத்து வாய்மொழி நன்கொடை மூலம் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு உரிமையையும், அனுபவத்தையும் ஒப்படைத்தார் என்றும், வாதியின் தகப்பனார் வழக்குரை சொத்தை கடந்த 25 வருடங்களாக புஞ்சை பயிர் செய்து விவசாயம் செய்து வருகிறார் என்றும், வழக்குரை சொத்திற்கு கீழ்பக்கம் வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட கிணறும், புஞ்சை நிலமும் உள்ளது என்றும், அந்த கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து வழக்குரை சொத்திற்கும், அதற்கு மேல்பக்கம் உள்ள சொத்திற்கும் விவசாயம் செய்து வந்தார் என்றும், வாதியின் தகப்பனார் மாடசாமி தன் மகளான வாதி மீது ஏற்பட்ட அன்பு பாசத்தால் 27.10.2011 ல் ஏற்பாடு ஆவணம் மூலம் உரிமையை அனுபவத்தை கொடுத்தார் என்றும், 27.10.2011 தேதி முதல் வாதி வழக்குரை சொத்தை விவசாயம் செய்து ஆளுகையும், அனுபவமும் செய்து வருகிறார் என்றும், வாதி பெயரில் அவருடைய சகோதர, சகோதரிகள் மற்றும் தந்தை பெயரில் கூட்டுபட்டா ஏற்பட்டு உள்ளது என்றும், பட்டா எண்.96 ஆகும் என்றும், பிரதிவாதிக்கு, வழக்குரை சொத்தில் யாதொரு உரிமையும், ஆளுகையும், அனுபவமும் கிடையாது என்றும், பிரதிவாதி 17.01.2018 ல் வழக்குரை சொத்தில் அத்துமீறி நுழைந்து, அதில் உள்ள மரங்களை வெட்ட முயற்சி செய்தார் என்றும், அப்போது வாதியும், வாதியின் தகப்பனாரும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும் சத்தம் போடவும், பிரதிவாதி, வாதியின் வழக்குரை

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:47:54 +0530

சொத்தின் உரிமையை மறுத்தும் கூறிவிட்டு சென்றுவிட்டார் என்றும், வழக்குரை சொத்திற்கு தனக்கு தன் பட்டா இருப்பதாக கூறி, வழக்குரை சொத்தை ஆக்கிரமிப்பு செய்துவிடுவதாக ஊரில் வெளிப்படையாக பேசி வருகிறார் என்றும், பிரதிவாதிக்கு, வழக்குரை சொத்திற்கு வடபக்கம் உரிமை உள்ளதை ஆதாரமாக வைத்துக் கொண்டு, வழக்குரை சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய 17.01.2018 தேதி முதல் முயற்சி செய்து வருகிறார் என்றும், வாதி பக்கம் நீதியும், சமநிலை வாய்ப்பும், முதன்மை வழக்கும் உள்ளது என்றும், பிரதிவாதியின் செயலை இந்நீதிமன்ற உத்தரவு மூலம் தடுத்து நிறுத்தாவிடில் வாதிக்கு பேரிழப்பு ஏற்படக்கூடியதாக உள்ளது என்றும், எனவே இந்த வழக்கை விளம்புகை அதன் பின்னீடாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3) <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> : -**

பிராது சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், தபசில் சொத்தில் புல எண்.168/8 ல் 2 ஏக்கர் 63 செண்ட் நிலம் மற்றும் 168/9, 168/10 ஆகியவற்றில் பிரிவின்றி 1/18 பங்கு சுடலைமுத்து கோனார் மகன் பெரியசாமி கோனாருக்கு பாத்தியப்பட்டது என்றும், அதனை மேற்படி பெரியசாமி கோனார் 28.09.1981 ல் பரிவர்த்தனை பத்திரம் மூலம் ராமன் குமாரர் சுடலைமுத்து என்பவருக்கு கொடுத்துள்ளார் என்றும், எனவே வாதியின் தாத்தா சுடலைமுத்துவிற்கு தபசில் புல எண்.168/8 ல், ஏக்கர் 2, செண்ட் 63 ல் பிரிவின்றி 1/18 பாகம் அதாவது 14 – 1/2 செண்ட் மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், மேற்படி சுடலைமுத்துவிற்கு, மாடசாமி,

Digitally signed by RAMADHAS
RAMADHAS Date: 2026.03.11 18:48:01 +0530

பழனி என்ற இரு ஆண் மக்களும், கிருஷ்ணம்மாள், லெட்சுமி என்ற இரு பெண் மக்களும் உள்ளார்கள் என்றும், மாடசாமி மகன்தான் இந்த வாதி ஆவார் என்றும், ஆனால் வாதியின் தாத்தா சுடலைமுத்துவிற்கு பழனி என்ற ஒரு மகன் உள்ள விபரமும் வழக்குரையில் மறைக்கப்பட்டுள்ளது என்றும், வாதியின் தாத்தா சுடலைமுத்துவிற்கு தபசில் புல எண்ணில் 18/8 ல் பிரிவின்றி 14 – 1/2 செண்ட் மட்டுமே 1981ம் வருட பரிவர்த்தனை பத்திரம் படி பாத்தியப்பட்டது என்ற நிலையில், ஷையாரின் வாரிசுகள் மாடசாமி, பழனி, கிருஷ்ணம்மாள், லெட்சுமி ஆகிய நான்கு பேர்களுக்கும், மேற்படி 14 – 1/2 செண்ட் நிலத்தில் பிரிவின்றி 1/4 பாகம் அதாவது ஒவ்வொருவருக்கும் 3 – 1/2 செண்ட் மட்டுமே பாத்தியம் என்றும், அந்தவகையில் வாதியின் தந்தை மாடசாமிக்கு தபசில் புல எண்.168/8 ல் 3 – 1/2 செண்டு மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், அதனை மட்டுமே மேற்படி மாடசாமி தனது மகள் வாதிக்கு செட்டில்மெண்ட் எழுத முடியும் என்றும், அதனை விடுத்து தனக்கு பாத்தியப்படாத ஏக்கர் 1, செண்டு 46-ஐ 27.10.2011 ல் செட்டில்மெண்ட் எழுத வாதியின் தந்தை மாடசாமிக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும், எனவே தபசில் சொத்தில் எவ்வித உரிமையும், அனுபவமும் கிடையாது என்பது தெளிவாகும் என்றும், வழக்குரை சொத்து என்பது பிரதிவாதியின் தாய் பாகத்திற்கு 1975 ம் ஆண்டு ஏற்பட்ட இரு பதிவு பெற்ற கிரைய பத்திரங்கள் வழி ஏக்கர் 1, செண்டு 2 – 1/4 மற்றும் பிரதிவாதிக்கு 2010 ல் ஏற்பட்ட பதிவு பெற்ற கிரையம் வழி ஏக்கர் 1, செண்டு 25 மற்றும் 2012 ஏற்பட்ட பதிவு பெற்ற கிரையம் வழி செண்டு 29 ஆக மொத்தம் ஏக்கர் 2,

RAMADHAS
Digitally signed by RAMADHAS
Date: 2026.03.11 18:48:06 +0530

செண்டு 56 – 1/4 பாத்தியம் என்றும், பிரதிவாதியின் தாய் பார்வதி மறைவிற்கு பிறகு மேற்படி பார்வதியின் கணவரும், பிரதிவாதியின் தந்தையுமான பரமசிவன் மேற்படி பார்வதி பெயரில் ஏற்பட்ட சொத்தினை அடைந்து அனுபவம் செய்து, பின்னர் அதனை தனது மகன் பிரதிவாதிக்கு 2010 ல் பதிவு பெற்ற ஆவணம் வழி கொடுத்துவிட்டார் என்றும், ஆகவே தபசில் சர்வே எண்.168/8 ல் பிரதிவாதிக்கு ஏக்கர் 2, செண்டு 56 – 1/4 பாத்தியம் என்றும், அதனை பிரதிவாதி ஆண்டு, அனுபவம் செய்து வருகிறார் என்றும், மேலும் வருவாய்துறையில் மனு செய்து, தபசில் புல எண்.168/8 ல் ஷை ஏக்கர் 2, செண்டு 56 – 1/4 ஐ உட்பிரிவு செய்து தனிப்பட்டா பெற்று தீர்வை செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றும், தபசில் புல எண்ணில் ஏற்கனவே விவரித்துள்ள படி செண்டு 3 – 1/2 மட்டுமே உரிமை உடைய வாதியின் தகப்பனார் தனக்கு உரிமையில்லாத ஏக்கர் 1, செண்டு 48 ஐ வாதிக்கு நன்கொடை எழுதி வைத்துள்ள விபரம் அறிந்த பிரதிவாதி இந்த வாதியின் தகப்பனார் மீது காவல்துறை நிலமோசடி பிரிவில் புகார் செய்து 2013 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, தற்போது 2018 பிப்ரவரி மாதம் முதல் விசாரணை நடைபெற்று வருகிறது என்றும், இதில் வாதியின் தகப்பனாரும் விசாரணையில் கலந்து கொண்டார் என்றும், விசாரணையில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட உள்ளது என்றும், எனவே குற்றவியல் துறை நடவடிக்கையில் இருந்து தப்ப வேண்டும் என்பதற்காகதான் வாதி தனது தகப்பனார் மாடசாமியை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இந்த சிவில் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், தபசில் சொத்தில் வாதி மற்றும் அவரது

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:48:12 +0530

தந்தை மாடசாமிக்கு எக்காலத்திலும் உரிமையோ, அனுபவமோ கிடையாது என்றும், எனவே வாதியின் அசல் வழக்கை இந்த பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4) <u>வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வழக்கின் தீர்வுக்காக கீழ்க்கண்டவாறு எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.</u>**

1. வழக்குரை சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என வாதி கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
2. வழக்குரை சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளதா?
3. வழக்குரையில் சொல்லியுள்ள படி, வாதிக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
4. வேறு என்ன பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது?

**5)** வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மாடசாமி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.14 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6) <u>எழுவினாக்கள் 1 முதல் 3 ற்கான தீர்வு</u>**

அசல் வழக்கானது, வழக்குரை சொத்து வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டும், அதன்தொடர்ச்சியாக வழக்குரை சொத்தில் வாதியின் தனித்த அனுபவத்தினை பிரதிவாதியோ, அவரது

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:48:17 +0530

வகையறாக்களோ, முகவர்களோ, வேலையாட்களோ மற்றும் வேறு யாரும் எந்தவித இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில், வழக்குரை சொத்து ஆதியில் வாதியின் தாத்தாவான சுடலைமுத்து என்பவருக்கும், பார்வதி என்பவருக்கும் பாத்தியப்பட்டு, அவர்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினை அடிப்படையில் வாதியின் தாத்தாவான சுடலைமுத்துவிற்கு வழக்குரை சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், வாதியின் தகப்பனார் மாடசாமி என்பவர் அவருடைய சகோதரியான கிருஷ்ணம்மாள், லெட்சுமி ஆகியோர்களுக்கு சீர் சீராட்டுகள் செய்ததால், வாதியின் தாத்தா வாதியின் தந்தை மாடசாமி என்பவருக்கு வாய்மொழி நன்கொடை மூலம் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தினார் என்றும், அதனடிப்படையில் வாதியின் தகப்பனார் மாடசாமி, அவரது மகளான வாதிக்கு 27.10.2011 ம் தேதியிட்ட ஏற்பாடு ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்றும், பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டதால், இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

**7)** பிரதிவாதி தரப்பில், ஆதியில் பெரியசாமி கோனார் என்பவருக்கு சர்வே எண்.168/8 ல் 2 ஏக்கர், 63 செண்ட் மற்றும் சர்வே எண்.168/9, சர்வே எண்.168/10 ஆகியவற்றில் பிரிவின்றி 1/18 பங்கான 14 - 1/2 செண்ட் பாத்தியப்பட்டது என்றும், 28.09.1981 ல் ஏற்பட்ட பரிவர்த்தனை பத்திரம் மூலம் மேற்கண்ட பெரியசாமி கோனார் என்பவர் வாதியின் தாத்தாவான ராமன் குமாரர் சுடலைமுத்து என்பவருக்கு



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:48:23 +0530

கொடுத்துள்ளார் என்றும், எனவே வாதியின் தாத்தா சுடலைமுத்துவிற்கு 14 – 1/2 செண்ட் மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், வாதியின் தாத்தா சுடலைமுத்துவிற்கு மாடசாமி, பழனி என்ற இரு ஆண்மக்களும், கிருஷ்ணம்மாள், லெட்சுமி என்ற இரு பெண்மக்களும் உள்ளார்கள் என்றும், ஆனால், மேற்கண்ட பழனி என்பவர் இருக்கும் விபரத்தையே வாதி வழக்கில் மறைத்துவிட்டார் என்றும், வாதியின் தாத்தாவிற்கு 14 – 1/2 செண்ட் மட்டுமே பாத்தியம் என்பதால், அவர்களின் வாரிசுகள் மாடசாமி, பழனி, கிருஷ்ணம்மள், லெட்சுமி ஆகிய நான்கு பேர்களுக்கும் பிரிவின்றி 1/4 பாகமான 3 – 1/2 செண்ட் மட்டுமே ஒவ்வொருவருக்கும் பாத்தியம் என்றும், மேற்கண்ட நிலையில், வாதியின் தகப்பனார் ஏக்கர் 1, செண்ட் 46 வாதிக்கு 27.10.2011 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதிக் கொடுக்க உரிமை இல்லை என்றும் பிரதிவாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. மேலும், வழக்குரை சொத்து பிரதிவாதியின் தாயார் பார்வதி பெயரில் ஏற்பட்ட 25.07.1975 ம் தேதியிட்ட பி.சா.ஆ.2 கிரைய ஆவணம் மூலமும், 11.08.1975 ம் தேதியிட்ட பி.சா.ஆ.3 கிரைய ஆவணம் மூலமும் பிரதிவாதிக்கு அவரது தகப்பனார் 31.05.2010 ல் ஏற்படுத்திக் கொடுத்த ஏற்பாடு ஆவணம் பி.சா.ஆ.4 ன் மூலமும், 20.09.2010 ம் தேதியிட்ட பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்ட பி.சா.ஆ.5 கிரைய ஆவணம் மூலமும், 13.06.2012 ம் தேதியிட்ட பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் பி.சா.ஆ.6 மூலமும், வழக்குரை சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு, பி.சா.ஆ.7, கணினி பட்டா ஏற்பட்டு, பி.சா.ஆ.8, தீர்வை இரசீதுகள் பிரதிவாதி செலுத்தி வருகிறார் என்றும், எனவே வழக்குரை

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:48:29 +0530

சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதால், அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் பிரதிவாதி தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.

**8)** இதுசம்பந்தமாக, வாதி, வா.சா.1 ஆக விசாரிக்கப்படும் போது, தனது முதல் விசாரணை சாட்சியத்தில், பிராது தபசில் சொத்து மொத்த பரப்பளவு ஆதியிலே தனது தந்தையின் தந்தை சுடலைமுத்து மற்றும் பார்வதி என்பவருக்கு பாத்தியப்பட்டது ஆகும் என்றும், சுடலைமுத்து மற்றும் பார்வதி வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றும், அந்த பாகப்பிரிவினை படி பிராது தபசில் தனது தந்தையின் தந்தை சுடலைமுத்துவிற்கு ஒதுக்கப்பட்டது என்றும், பிராது தபசில் சர்வே எண்.168/8 ல் தெற்கடைய ஏக்கர் 1, சென்ட் 48 சுடலைமுத்துவிற்கு ஒதுக்கப்பட்டு, அவர் ஆளுகையும், அனுபவமும் செய்து வந்தார் என்றும், சுடலைமுத்து பெயரில் பட்டா ஏற்பட்டு உள்ளது என்றும், தனது தகப்பனார் மாடசாமி தன்னுடைய சகோதரிகளான கிருஷ்ணம்மாள், லெட்சுமி ஆகியோர்களுக்கு சீர்சீராட்டுகள் செய்வதால் பிராது தபசில் சொத்தை தனது தகப்பனாருக்கு, மேற்படி சுடலைமுத்து வாய்மொழி நன்கொடை மூலம் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு உரிமையையும், அனுபவத்தையும் ஒப்படைத்தார் என்றும், தனது தகப்பனார் பிராது தபசில் சொத்தை கடந்த 25 வருடங்களாக புஞ்சை பயிர் செய்து விவசாயம் செய்து வருகிறார் என்றும், பிராது தபசில் சொத்திற்கு கீழ்பக்கம் தனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட கிணறும், புஞ்சை நிலமும் உள்ளது என்றும், அந்த கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து பிராது தபசில் சொத்திற்கும், அதற்கு மேல்பக்கம் உள்ள சொத்திற்கும் விவசாயம் செய்து



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:48:34 +0530

வந்தார் என்றும், தனது தகப்பனார் மாடசாமி தன் மகளான தன் மீது ஏற்பட்ட அன்பு பாசத்தால் 27.10.2011ல் ஏற்பாடு ஆவணம் மூலம் உரிமையை அனுபவத்தை கொடுத்தார் என்றும், 27.10.2011 தேதி முதல் தான் வழக்குரை சொத்தை விவசாயம் செய்து ஆளுகையும், அனுபவமும் செய்து வருகிறேன் என்றும், தனது பெயரில் அவருடைய சகோதர, சகோதரிகள் மற்றும் தந்தை பெயரில் கூட்டுபட்டா ஏற்பட்டு உள்ளது என்றும், பட்டா எண்.96 ஆகும் என்றும், பிரதிவாதிக்கு, பிராது தபசில் சொத்தில் யாதொரு உரிமையும், ஆளுகையும், அனுபவமும் கிடையாது என்றும் சாட்சியமளித்துள்ளார். வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 ஆக 27.10.2011ம் தேதியிட்ட ஏற்பாட்டு ஆவணம் அசலும், வா.சா.ஆ.2 ஆக 14/2 பசலிக்குரிய பட்டா - 1ம், வா.சா.ஆ.3 ஆக தீர்வை ரசீது (எண்ணம் - 3 ), வா.சா.ஆ.4 ஆக கணினி பட்டா (எண்ணம் - 1 )ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**9)** மேலும், வாதியின் தகப்பனாரான மாடசாமி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்படும் போது, தனது முதல் விசாரணை சாட்சியத்தில், தான் தன்னுடைய சகோதரிகளான கிருஷ்ணம்மாள், லெட்சுமி ஆகியோர்களுக்கு சீர்சீராட்டுகள் செய்வதால் பிராது தபசில் சொத்தை தனக்கு தன் தகப்பனார் சுடலைமுத்து வாய்மொழி நன்கொடை மூலம் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு உரிமையையும், அனுபவத்தையும் ஒப்படைத்தார் என்றும், தான் பிராது தபசில் சொத்தை கடந்த 25 வருடங்களாக புஞ்சை பயிர் செய்து விவசாயம் செய்து வந்தேன் என்றும், பிராது தபசில் சொத்தில் தனக்கு பாத்தியப்பட்ட கிணறும், புஞ்சை நிலமும் உள்ளது என்றும்,

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:48:39 +0530

அந்த கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து பிராது தபசில் சொத்திற்கும், அதற்கு மேல்பக்கம் உள்ள சொத்திற்கும் விவசாயம் செய்து வந்தேன் என்றும், தான் தனது மகளான வாதி மீது ஏற்பட்ட அன்பு பாசத்தால் 27.10.2011 ல் ஏற்பாடு ஆவணம் மூலம் உரிமையை அனுபவத்தை கொடுத்தேன் என்றும், 27.10.2011 ல் ஏற்பட்ட ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றும், 27.10.2011 தேதி முதல் வாதி பிராது தபசில் சொத்தை விவசாயம் செய்து ஆளுகையும், அனுபவமும் செய்து வருகிறார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**10)** மேற்கண்ட வா.சா.1 மற்றும் வா.சா.2 ன் சாட்சியங்களை பார்வையிடும் போது, வழக்குரை சொத்து ஆதியில் வாதியின் தாத்தாவான சுடலைமுத்து என்பவருக்கும், பார்வதி என்பவருக்கும் பாத்தியப்பட்டு இருந்ததில், அவர்களுக்கு இடையேயான வாய்மொழி பாகப்பிரிவினையில், வாதியின் தாத்தாவிற்கு வழக்குரை சொத்து ஒதுக்கப்பட்டதாகவும், வாதியின் தகப்பனார் மாடசாமி, அவருடைய சகோதரிகளான கிருஷ்ணம்மாள், லெட்சுமி ஆகியோர்களுக்கு சீர்சீராட்டுகள் செய்வதால், வாதியின் தாத்தா, வாதியின் தந்தைக்கு வாய்மொழி நன்கொடை ஆவணம் ஏற்படுத்தி, வாதியின் தந்தை, வாதிக்கு 27.10.2011 ம் தேதியிட்ட ஏற்பாடு ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதாக சாட்சியமளித்திருப்பது தெரிகிறது.

**11)** இதுசம்பந்தமாக, பிரதிவாதி, பி.சா.1 ஆக விசாரிக்கப்படும் போது, தனது முதல் விசாரணை சாட்சியத்தில், வாதியின் தாத்தா சுடலைமுத்துவிற்கு தபசில் புல எண்ணில் 18/8 ல் பிரிவின்றி 14 – 1/2 செண்ட் மட்டுமே தை 1981 ம் வருட



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:48:44 +0530

பரிவர்த்தனை பத்திரம் படி பாத்தியப்பட்டது என்ற நிலையில், ஷையாரின் வாரிசுகள் மாடசாமி, பழனி, கிருஷ்ணம்மாள், லெட்சுமி ஆகிய நான்கு பேர்களுக்கும், ஷை 14 – 1/2 செண்ட் நிலத்தில் பிரிவின்றி 1/4 பாகம் அதாவது ஒவ்வொருவருக்கும் 3 – 1/2 செண்ட் மட்டுமே பாத்தியம் என்றும், அந்தவகையில் வாதியின் தந்தை மாடசாமிக்கு தபசில் புல எண்.168/8 ல் 3 – 1/2 செண்டு மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், அதனை மட்டுமே மாடசாமி தனது மகன் வாதிக்கு செட்டில்மெண்ட் எழுத முடியும் என்றும், அதனை விடுத்து தனக்கு பாத்தியப்படாத ஏக்கர் 1, செண்டு 46-ஐ 27.10.2011 ல் செட்டில்மெண்ட் எழுத வாதியின் தந்தை மாடசாமிக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும், எனவே தபசில் சொத்தில் எவ்வித உரிமையும், அனுபவமும் கிடையாது என்பது தெளிவாகும் என்றும், தபசில் சொத்து என்பது தன் தாயார் பார்வதி பாகத்திற்கு 1975 ம் ஆண்டு ஏற்பட்ட இரு பதிவு பெற்ற கிரைய பத்திரங்கள் வழி ஏக்கர் 1, செண்டு 2 - 1/4 மற்றும் தனக்கு 2010 ல் ஏற்பட்ட பதிவு பெற்ற கிரையம் வழி ஏக்கர் 1, செண்டு 25 மற்றும் 2012 ஏற்பட்ட பதிவு பெற்ற கிரையம் வழி செண்டு 29 ஆக மொத்தம் ஏக்கர் 2, செண்டு 56 – 1/4 பாத்தியம் என்றும், தனது தாயார் பார்வதி மறைவிற்கு பிறகு ஷை பார்வதியின் கணவரும், தன் தந்தையுமான பரமசிவன், மேற்படி பார்வதி பெயரில் ஏற்பட்ட சொத்தினை அடைந்து அனுபவம் செய்து வந்து, பின்னர் அதனை தனது மகனான தனக்கு 2010 ல் பதிவு பெற்ற ஆவணம் வழி கொடுத்துவிட்டார் என்றும், ஆகவே தபசில் சர்வே எண்.168/8 ல் தனக்கு ஏக்கர் 2, செண்டு 56 – 1/4 பாத்தியம் அதனை தான் ஆண்டு, அனுபவம் செய்து வருகிறேன்

RAMADHAS
Digitally signed by RAMADHAS
Date: 2026.03.11 18:48:53 +0530

என்றும், மேலும், வருவாய்துறையில் மனு செய்து, தபசில் புல எண்.168/8 ல் ஷை ஏக்கர் 2, செண்டு 56 – 1/4 ஐ உட்பிரிவு செய்து, தனிப்பட்டா பெற்று, தீர்வை செலுத்தி, அனுபவம் செய்து வருகிறேன் என்றும், மேற்படி விபரங்கள் அனைத்தும் வாதிக்கு நன்கு தெரியும் என்றும், தபசில் புல எண்ணில் ஏற்கனவே விவரித்துள்ளபடி செண்டு 3 – 1/2 மட்டுமே உரிமை உடைய வாதியின் தகப்பனார் தனக்கு உரிமையில்லாத ஏக்கர் 1, செண்டு 48-ஐ வாதிக்கு நன்கொடை எழுதி வைத்துள்ள விபரம் அறிந்த தான் வழக்கு வாதியின் தகப்பனார் மீது காவல்துறை நிலமோசடி பிரிவில் புகார் செய்து, 2013 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, தற்போது 2018 பிப்ரவரி மாதம் முதல் விசாரணை நடைபெற்று வருகிறது என்றும், இதில் வாதியின் தகப்பனாரும் விசாரணையில் கலந்து கொண்டார் என்றும், விசாரணையில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் நிலையில் இருந்த காரணத்தால், ஷை குற்றவியல் துறை நடவடிக்கையில் இருந்து தப்ப வேண்டும் என்பதற்காகவும், வாதி தனது தகப்பனார் மாடசாமியை காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவும் இந்த சிவில் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார். பி.சா.1 ன் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**12)** 25.07.1975 ம் தேதியிட்ட பி.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை பார்வையிடும் போது, வழக்குரை சொத்தான சர்வே எண்.168/8 ல் 95 செண்ட்-ம், 11.08.1975 ம் தேதியிட்ட பி.சா.ஆ.3 கிரைய ஆவணத்தை பார்வையிடும் போது, வழக்குரை சொத்தான சர்வே எண்.168/8 ல் 7 – 1/4 செண்ட்-ம், ஆக மொத்தம் 1 ஏக்கர், 2 – 1/4



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:49:00 +0530

செண்ட் மேற்கண்ட இரு ஆவணங்களின் மூலம் பிரதிவாதியின் தாயாரான பார்வதி என்பவர் கிரையம் பெற்றுள்ளது தெரிகிறது. மேற்கண்ட 1 ஏக்கர், 2 – 1/4 செண்ட்-ஐ பிரதிவாதியின் தகப்பனாரான பரமசிவன் என்பவர் 31.05.2010 ம் தேதியிட்ட பி.சா.ஆ.4 ஏற்பாடு ஆவணம் மூலம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தியுள்ளது தெரிகிறது. மேலும், 20.09.2010 ம் தேதியிட்ட பி.சா.ஆ.5 கிரைய ஆவணத்தை பார்வையிடும் போது, வழக்குரை சொத்தான சர்வே எண்.168/8 ல் ஏக்கர் 1, செண்ட் 25-ஐ பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளது தெரிகிறது. 13.06.2012 ம் தேதியிட்ட பி.சா.ஆ.6 கிரைய ஆவணத்தை பார்வையிடும் போது, வழக்குரை சொத்தான சர்வே எண்.168/8 ல் செண்ட் 29-ஐ பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளது தெரிகிறது. மேற்கண்டவாறு, மொத்த பரப்பளவான 2 ஏக்கர், 63 செண்ட் கொண்ட சர்வே எண்.168/8 ல், பிரதிவாதிக்கு ஏக்கர் 2, செண்ட் 56 – 1/4 பாத்தியப்பட்டுள்ளது தெரிகிறது.

**13)** மேலும், பிரதிவாதி வருவாய்துறையில் மனு செய்து, புல எண்.168/8 ல், ஏக்கர் 2, செண்ட் 56 – 1/4 ஐ உட்பிரிவு செய்து, தனிப்பட்டா பெற்றிருப்பது பி.சா.ஆ.7 ஐ பார்வையிடும் போது தெரிகிறது. மேற்கண்ட சொத்திற்கு பிரதிவாதி தீர்வை இரசீது செலுத்தியிருப்பது பி.சா.ஆ.8 ஐ பார்வையிடும் போது தெரிகிறது. மேலும், மேற்கண்ட சொத்திற்கு 1433 ம் வருட பசலிக்கான சாகுபடி அடங்கல் கணக்கு பி.சா.ஆ.9 ஆகவும், மேற்படி நிலத்தில் பிரதிவாதி, நெல் பயிர் செய்ததற்கான இன்சூரன்ஸ் காப்பீடு பி.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சொத்தில் விவசாய மோட்டார் பம்பு செட்டிற்கு பிரதிவாதிக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக தமிழ்நாடு



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:49:06 +0530

மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திலிருந்து வந்த கடிதம் பி.சா.ஆ.12 ஆகவும், மின் கட்டண அட்டை பி.சா.ஆ.14 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவற்றை பார்க்கும் போது, வழக்குரை சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு, பிரதிவாதியின் அனுபவத்தில் இருப்பதாக பிரதிவாதி தரப்பில் பி.சா.1ன் மூலம் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது தெளிவாக தெரிகிறது.

**14)** மேற்கண்ட நிலையில், வாதி தரப்பில், வாதி கூறியுள்ளவாறு, ஆதியில் வாதியின் தாத்தாவான சுடலைமுத்து என்பவருக்கு வாய்மொழி பாகம் மூலம் வழக்குரை சொத்து ஒதுக்கப்பட்டது என்பதை நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், வாதி தரப்பில், வாதியின் தகப்பனாரான மாடசாமி என்பவருக்கு கிருஷ்ணம்மாள், லெட்சுமி ஆகியோர்கள் மட்டும்தான் சகோதரிகள் என்றும், அவர்களுக்கு வாதியின் தகப்பனார் நல்ல முறையில் சீர்சீராட்டு செய்த காரணத்தினால் வாதியின் தாத்தாவான சுடலைமுத்து என்பவர் வாதியின் தந்தைக்கு வாய்மொழி நன்கொடை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்தார் என்று சொல்லப்பட்டிருந்தாலும், வாதியின் தந்தைக்கு பழனி என்ற சகோதரர் இருப்பதும், அதை மறைத்து இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பதும், வா.சா.1ன் குறுக்கு விசாரணையை பார்வையிடும் போது தெளிவாக தெரிகிறது. வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தன் தாத்தாவிற்கு நான்கு மனைவிகள் உள்ளனர் என்றும், தன் அப்பா மூன்றாவது மனைவியின் வாரிசு ஆவார் என்றும், தன் அப்பாவிற்கு ஒரு தம்பியும், ஒரு தங்கையும் உள்ளனர் என்றும், தாத்தாவின் முதல் மனைவிக்கு



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:49:13 +0530

ஒரு பெண் மட்டும் வாரிசு ஆவார் என்றும், இரண்டாவது மனைவிக்கு எத்தனை குழந்தைகள் என்று தனக்கு தெரியவில்லை என்றும், நான்காவது மனைவிக்கு ஒரு மகனும், இரண்டு மகளும் உள்ளனர் என்றும், தனது பிராதில் தனது அப்பாவிற்கு கிருஷ்ணம்மாள், லெட்சுமி என்ற இரண்டு சகோதரிகள் உள்ளனர் என்று தான் சொல்லியுள்ளதில் லெட்சுமி என்பவர் மூத்த தாரத்தின் மகள் ஆவார் என்றும், லெட்சுமி தன் அப்பாவுடன் பிறந்தவர் ஆவார் என்றும், தன் அப்பாவின் தம்பி பெயர் பழனி ஆவார் என்றும், பிராதில் பழனி என்ற ஒரு சகோதரர் இருக்கிறார் என்று சொல்லவில்லை என்றால் அதுபற்றி தனக்கு தெரியாது என்றும், பிராதில் தன் தாத்தாவிற்கு நான்கு மனைவிகள் என்று தான் சொல்லவில்லை என்றால் அதுபற்றி தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். ஆனால் வழக்குரையில், வாதியின் தாத்தாவிற்கு நான்கு மனைவிகள் இருப்பது பற்றியோ, தன் தகப்பனாருக்கு பழனி என்ற சகோதரர் இருப்பது பற்றியோ எதுவும் குறிப்பிடாமல், வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிகிறது. வா.சா.1 மற்றும் வா.சா.2 ன் சாட்சியத்தையும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பார்வையிடும் போது, வாதியின் தாத்தா சுடலைமுத்து என்பவருக்கும், பார்வதி என்பவருக்கும் வாய்மொழி பாகம் ஏற்பட்டு, வழக்குரை சொத்து வாதியின் தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்டது என்று வாதி கூறியிருப்பதை வாதி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், வாதியின் தாத்தா சுடலைமுத்து என்பவர் வாதியின் தந்தை மாடசாமி என்பவருக்கு வாய்மொழி

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:49:19 +0530

நன்கொடை ஆவணம் கொடுத்தார் என்று வாதி தரப்பில் சொல்லியிருப்பது நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. வாதியின் தாத்தா மற்றும் தகப்பனாருக்கு வழக்குரை சொத்தில் முழுமையான உரிமை உள்ளது என்பதை வாதி நிரூபிக்காத நிலையில், வாதியின் தகப்பனார் எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.1, ஏற்பாடு ஆவணத்தை வைத்து வழக்குரை சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதாக வாதி கோரியிருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே வாதி தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் அசல் வழக்கை நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே எழுவினாக்கள் 1 முதல் 3 ற்கு வாதிக்கு எதிராகவே இந்நீதிமன்றம் மேற்கண்டவாறு விடை காண்கிறது.

**15)** **<u>எழுவினா 4 ற்கான தீர்வு</u>**

இவ்வழக்கின் தன்மையை பார்க்கும்பொழுது, தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவரே ஏற்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**16)** முடிவாக, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:49:25 +0530

இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:49:31 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி.

**1. வாதி தரப்பு சாட்சிகள் :-**

| | | |
|---|---|---|
| வா.சா.1 | - | சந்திரகுமாரி |
| வா.சா.2 | - | மாடசாமி |

**2. வாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 27.10.2011 | ஏற்பாட்டு ஆவணம் அசல் |
| வா.சா.ஆ.2 | --- | 14/2 பசலிக்குரிய பட்டா - 1 |
| வா.சா.ஆ.3 | --- | தீர்வை ரசீது (எண்ணம் - 3 ) |
| வா.சா.ஆ.4 | --- | கணினி பட்டா (எண்ணம் - 1) |

**3. பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :-**

| | | |
|---|---|---|
| பி.சா.1 | - | முருகன் |

**4. பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | 28.09.1981 | சுடலைமுத்து மற்றும் பெரியசாமி கோனார் ஏற்படுத்திக் கொண்ட பரிவர்த்தனை பத்திரம் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.2 | 25.07.1975 | பார்வதி அம்மாள் பெயரில் வாங்கிய கிரைய ஆவணம் கணினி நகல் |



RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:49:37 +0530

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.3 | 11.08.1975 | பார்வதி அம்மாள் பெயரில் வாங்கிய கிரைய ஆவணம் கணினி நகல் |
| பி.சா.ஆ.4 | 31.05.2010 | பிரதிவாதியின் தகப்பனார் பரமசிவன், பிரதிவாதி பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்த ஏற்பாடு ஆவணம் கணினி நகல் |
| பி.சா.ஆ.5 | 20.09.2010 | பிரதிவாதி வாங்கிய கிரைய ஆவணம் கணினி நகல் |
| பி.சா.ஆ.6 | 13.06.2012 | பிரதிவாதி வாங்கிய கிரைய ஆவணம் கணினி நகல் |
| பி.சா.ஆ.7 | --- | பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்ட கணினி பட்டா |
| பி.சா.ஆ.8 | --- | தீர்வை ரசீதுகள் (எண்ணம் - 2 ) |
| பி.சா.ஆ.9 | --- | 1433 ம் வருட பசலிக்கான சாகுபடி அடங்கல் கணக்கு அசல் |
| பி.சா.ஆ.10 | --- | தபசில் நிலத்தில் பிரதிவாதி, நெல் பயிர் செய்ததற்கான இன்சூரன்ஸ் காப்பீடு ஆவணம் நகல் |
| பி.சா.ஆ.11 | --- | விஜயநாராயணம் காவல் நிலைய குற்ற எண்.132/2013 ன் முதல் தகவல் அறிக்கை நகல் |
| பி.சா.ஆ.12 | --- | தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் கடிதம் அசல் |
| பி.சா.ஆ.13 | --- | தபசில் சொத்தில் வேளாண்மை துறையின் திட்டம் சம்மந்தமான போட்டோ மற்றும் சிடி எண்ணம் - 1 |
| பி.சா.ஆ.14 | --- | மின் கட்டண அட்டை |

5. <u>சாட்சி தரப்பு சான்றாவணங்கள்</u> :- இல்லை

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.03.11 18:49:43 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி.

சார்பு நீதிமன்றம்,

நாங்குநேரி

அ.வ.எண்.126/2020

நேரிய/வரைவு தீர்ப்புரை

நாள் - 11.03.2026